Toronto Seniors Housing Corporation

# சீனியர்ஸ் ஸ்பீக்கிங் 2025 கோடை காலம்

## உள்ளடக்கம்


**பிரதம நிறைவேற்று அதிகாரி வழங்கிய ஆசிச் செய்தி** ........ *2*

**கலாசாரங்களை இணைத்தல், சமுதாயத்தை உருவாக்குதல்** ........ *4*

*Community Connect+* **இற்றைப்படுத்தல்** ........ *8*

**மூத்த குடியிருப்பாளர் ஆலோசனைக் குழுவை அறிந்து கொள்வோம்** ........ *11*

**குடியிருப்பாளர் கவிதை** ........ *13*

**செயலில் இறங்கிய சமுதாயம்** ........ *15*

**உங்கள் சமுதாயம் ஒரே பார்வையில்** ........ *17*

**பகிரப்பட்ட கதைகள் மூலமான காதல்** ........ *18*

*R-PATH* **இற்றைப்படுத்தல்** ........ *21*

**தி கார்டன் கேர்ள்ஸ்** ........ *24*

*2024* **ஆண்டறிக்கையின் சிறப்பம்சங்கள்** ........ *28*

**குடியிருப்பாளர்களுக்கான வளங்கள்** ........ *32*

**சீனியர்ஸ் ஸ்பீக் பல மொழிகளில் கிடைக்கின்றது** ........ *34*

**இணைந்திருங்கள்!** ........ *34*

## பிரதம நிறைவேற்று அதிகாரி வழங்கிய ஆசிச் செய்தி

அன்பின் குடியிருப்பாளர்களே,

சூரியன் உதித்து விட்டது, சீனியர்ஸ் ஸ்பீக் வித் யூ சஞ்சிகையின் கோடை கால இதழை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்! இந்த இதழ் தங்கள் சமுதாயத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி, மற்றவர்களையும் அவ்வாறு செய்யத் தூண்டிய குடியிருப்பாளர்களை பற்றிய கதைகளைக் கொண்டுள்ளது.

குடியிருப்பாளர்கள் தங்கள் சமுதாயங்களில் காட்டும் ஈடுபாட்டைப் பார்த்து நான் எப்போதும் வியப்படைகின்றேன். குடியிருப்பாளர் வட்டங்கள் சமுதாயச் செயற்பாட்டு நிதியத்தை *(CAF)* பல ஆக்கப்பூர்வமான வழிகளில் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. அவர்கள் தேநீர் அரட்டைகள் மற்றும் விளையாட்டு இரவுகள் முதல் டிராக் பிங்கோ மற்றும் டிராகன் படகு விழா விருந்துகள் வரை அனைத்தையும் ஏற்பாடு செய்கின்றார்கள். இந்தக் கோடை காலத்தில், *44 BBQ*களை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் நகர சபையுடன் பகிர்ந்து கொள்ளப்பட்ட எங்கள் *2024* ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையிலும் குடியிருப்பாளர்களின் முயற்சிகளைப் பாராட்டினோம். இந்த இதழில் அந்த

அறிக்கையிலிருந்து பெறப்பட்ட சிறப்பம்சங்களைக் காணலாம். நாங்கள் இப்போது எங்கள் 2026 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தை தயாரித்து வருகின்றோம். ஆகஸ்ட் மாதத்தில் எங்கள் ஆலோசனைக் கூட்டங்களில் கலந்து கொள்ள பதிவு செய்த அனைவருக்கும் நன்றி. உங்கள் நேரத்தையும் கருத்துக்களையும் பெறுமதியானவையாகக் கருதுகின்றோம்.

இந்த ஆண்டின் பிற்பகுதியில், குடியிருப்பாளர் அனுபவக் கருத்துக் கணிப்பின் இரண்டாம் பதிப்பில் உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு நாங்கள் உங்களைக் கேட்டுக்கொள்வோம். நாம் எத்துறைகளில் சிறப்பாகச் செயல்படுகின்றோம் என்பதையும் எத்துறைகளில் எம்மால் சிறப்பாகச் செயற்பட முடியும் என்பதையும் அறிய விரும்புகின்றோம். எங்கள் கடைசிக் கருத்துக் கணிப்பு, கட்டிடங்களில் சிறந்த நிகழ்ச்சிகளையும், சேவைகள் மற்றும் ஆதரவுகள் பற்றிய மேலதிக தகவல்களையும் நீங்கள் விரும்புகின்றீர்கள் என்பதைக் காட்டியது. இந்தப் பகுதிகளை மேம்படுத்த நகர பங்காளர்களுடன் நாங்கள் நெருக்கமாகப் பணியாற்றி வருகின்றோம். மேலும் பல்வேறு வகையான ஆதரவுகள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய இற்றைப்படுத்தப்பட்ட குடியிருப்பாளர் வரவேற்பு வழிகாட்டியை ஜூன் மாதத்தில் வெளியிட்டோம்.

இந்த இலையுதிர் காலத்தில் வெளியிடப்படவுள்ள புதிய மொழிபெயர்ப்பு மற்றும் உரை மொழிபெயர்ப்புக் கொள்கைக்கு உதவிய குடியிருப்பாளர்களுக்கு மிக்க நன்றி. டொரண்டோ டொரண்டோ சீனியர்ஸ் ஹவுசிங் திட்டத்தில் உள்ள பல்வேறு குடியிருப்பாளர்களை சிறப்பாக ஆதரிப்பதற்காக உங்கள் யோசனைகளைப் பயன்படுத்த நாங்கள் ஆவலுடன் காத்திருக்கின்றோம்.

எப்போதும் போல, உங்களைச் சந்திப்பதிலும் உங்கள் கருத்துக்களைக் கேட்பதிலும் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த இலையுதிர்காலத்தில் எனது பிரதம நிறைவேற்று அதிகாரியின் சுற்றுப் பயணத்தின் போதும், அடுத்த பிராந்திய குடியிருப்பாளர் தன்னார்வலர் கூட்டங்களிலும் உங்களில் பலரைச் சந்திக்க முடியும் என நம்புகின்றேன்.

ஒரு சிறந்த கோடை காலமாக அமைய வாழ்த்துக்கள், விரைவில் மீண்டும் உங்களைத் தொடர்புகொள்ள முடியும் என நம்புகின்றேன்!

டொம்

## கலாசாரங்களை இணைத்தல், சமுதாயத்தை உருவாக்குதல்

கென்சிங்டன் சந்தையின் மையப் பகுதியில், ஒரு துடிப்பான சிரேஷ்ட பிரசைகள் சமுதாயம் செழித்து

வளர்ந்து வருகின்றது. ஒரு வருடத்திற்கும் குறைவான காலத்திற்கு முன்பு, குடியிருப்பாளர்களின் ஒரு சிறிய குழு, கோவிட் தொற்றுநோய்க்குப் பின்னர் கட்டிடத்தில் முதல் நிகழ்வை நடத்தி, கட்டிடத்தில் சமுதாயத் தொடர்புகளை மீண்டும் உயிர்ப்பிக்க முடிவு செய்தது. இது ஒரு சவாலாக இருந்தது, ஏனெனில் பல குடியிருப்பாளர்கள தனிமைப்பட்டவர்களாக இருந்தனர் அல்லது வெவ்வேறு மொழிகளைப் பேசினர்.

குடியிருப்பாளர் தன்னார்வலரான கோனி *(Connie),* இந்தத் தடைகளை உடைத்தெறிந்து இணைப்பை ஏற்படுத்துவதில் உறுதியாக இருந்தார். குடியிருப்பாளர் வட்டக் கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றி குடியிருப்பாளர்களுடன் முன்கூட்டியே, வெவ்வேறு மொழிகளில் தொடர்பு கொள்ள, அவர் மற்ற தன்னார்வலர்கள், அவரது சமுதாய சேவைகள் ஒருங்கிணைப்பாளர் மற்றும் சமுதாய அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றினார். இது அனைவரும் பங்கேற்பதைச் சாத்தியப்படுத்தியது. இந்தக் குடியிருப்பாளர் வட்டத்தில் இப்போது பல மொழிகளைப் பேசும் *10*க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர்.



"எல்லாம் நலவுக்கே என்ற நம்பிக்கை, நேர்மறைச் சிந்தனை, நம்மைச் சுற்றியுள்ள சமுதாயத்தில் தீவிரமாக ஈடுபடுவதல் என்பவற்றை நாம் அறிந்தால், நோய் மற்றும் முதுமையிலும் கூட, வாழ்க்கை மகிழ்ச்சி இல்லாமல் இல்லை" என்று கூறும் கோனி சக குடியிருப்பாளர்களால் ஈர்க்கப்பட்டுள்ளார்.

2024 ஆம் ஆண்டில் ஒரே ஒரு நிகழ்வை மட்டுமே நடத்திய குடியிருப்பாளர்கள் 2025 இல் ஏற்கனவே இரண்டு நிகழ்வுகளை நடத்தியுள்ளதுடன், இன்னும் இரண்டு நிகழ்வுகளை இந்த ஆண்டின் பிற்பகுதியில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளனர். சமீபத்திய ட்ரகன் படகு விழா மிகப்பெரிய வெற்றியாக அமைந்தது. அதில் 100க்கும் மேற்பட்ட குடியிருப்பாளர்கள் கலந்து கொண்டனர்! அதிகமானோர் கலந்துகொண்டதால், குடியிருப்பாளர்

வட்டம் விரைவாக அதிக உணவைப் பெற வேண்டியிருந்தது.

தன்னார்வலர்களில் ஒருவரான கெதி, கைவினைப் பொருட்களை விரும்புகின்றார். தங்கள் அன்னையர் தின நிகழ்வுக்காக 100 சிற்றுண்டிப் பைகளை ஒன்றாகச் சேர்த்தார். அவர் அலங்கரித்துக் கொண்டிருக்கும் போது, உடனடியாக கீழே வந்த குடியிருப்பாளர்கள் உதவ விரும்பியதால் அவள் மகிழ்ச்சியடைந்தாள். சிலர் பின்னர் குடியிருப்பாளர் வட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

இந்த நிகழ்வுகள் மிகப் பிரபல்யமடைந்துள்ளன. இதை உணர்ந்து, குடியிருப்பாளர் வட்டம், இலையுதிர்காலத்தில் உற்சாகமான நிகழ்வுகளுக்கு அதிக பணத்தைச் செலவிடும் வகையில், தோட்டப் பொருட்களுக்கு தங்கள் சமுதாயச் செயற்பாட்டு நிதியத்தில் இருந்து சற்று குறைவாகச் செலவிட முடிவு செய்தது.

இந்த நிகழ்வுகள் மூலம், பலருக்கு புதிய நண்பர்கள் கிடைத்துள்ளனர். லிஃப்டில் செல்லும் போது அதிகமானோர் புன்னகைத்துக் கொள்கின்றனர், நடைபாதையில் செல்லும் போது கைகளை அசைத்து வாழ்த்துகின்றனர். அக்கம் பக்கத்தினர் இணைந்து பணியாற்றுவது உண்மையிலேயே ஒரு அற்புதமான சமூக உணர்வை உருவாக்கும். கோனி

புத்திசாலித்தனமாகச் சொன்னது போல், "ஒன்றாகச் சேர்ந்தால், எல்லாம் எளிதாக அமையும்."

## *Community Connect+* இற்றைப்படுத்தல்

### பிராந்திய குடியிருப்பாளர் தன்னார்வலர் கூட்டங்கள்

ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடைபெற்ற பிராந்திய குடியிருப்பாளர் தன்னார்வலர் கூட்டங்களில் *107* குடியிருப்பாளர் தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங் குறித்த குடியிருப்பாளர்கள் தங்கள் சமுதாயங்களுக்குள் ஆதரவை சிறப்பாக அணுகுவதை உறுதி செய்வதற்காக எங்கள் பணி வலுப்படுத்தும் பங்குடமைகள், மூத்தவர்களை மையமாகக் கொண்ட கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் மூத்தவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நன்கு புரிந்துகொள்ள ஊழியர்களுக்கு பயிற்சி வழங்குதல் ஆகியவை உள்ளிட்ட இற்றைப்படுத்தல்களை டொம் ஹண்டர் விளக்கினார்.

டொராண்டோ நகர சபையினர் தங்கள் மூன்றாவது மூத்தோர் உத்திக்கான உள்ளீடுகளைப் பெறுவதற்காக இந்தக் கூட்டங்களில் விளக்கக்கர்டசிகளை முன்வைத்தனர். கோடைக் காலநிலைக்குத் தயாராகும் வகையில் வெப்பத்தை சமாளிப்பது எவ்வாறு என்ற தலைப்பிலான ஒரு செயலமர்வை டொரண்டோ துணை மருத்துவத் துறையினர் நடாத்தினர்.



குடியிருப்பாளர்கள் தாங்கள் பெற்ற வெற்றிகளையும் தாங்கள் எதிர்கொண்ட சவால்களையும் விளக்கிக் கூறி தங்கள் சொந்தக் கதைகளைப் பகிர்ந்துகொண்டனர். கலைகள் மற்றும் விளையாட்டுச் செயற்பாடுகள், திரைப்பட இரவுகள், BBQகள் மற்றும் பல குடியிருப்பாளர் வட்டங்களின் முயற்சிகள் மூலமான அதிகரித்த சமுதாய நடவடிக்கைகளால் அனைவரும் ஊக்குவிக்கப்பட்டனர்.

### Community Connect+ கோடை கால இற்றைப்படுத்தல்

நகரம் முழுவதிலும், நாங்கள் 44 BBQகளை நடத்தி, 4,600 உணவுகளை வழங்கவுள்ளோம்.

ஜூன் மாத இறுதி வரையில், ஆண்டு முழுவதும் திட்டமிட்ட நிகழ்வுகள் மற்றும் செயற்பாடுகளுக்காகவும், விளையாட்டுகள் மற்றும்

தோட்டக் கலை கருவிகளுக்காகவும் சமுதாய செயற்பாட்டு நிதியத்துக்கு *(CAF) 291* விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் *280* விண்ணப்பங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, *2025* ஆம் ஆண்டுக்கான நிதியில் *96%* ஐ எவ்வாறு செலவிடப்பட வேண்டும் என்பதை குடியிருப்பாளர் தன்னார்வலர்கள் முடிவு செய்துள்ளனர்.

இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில், நாங்கள் பின்வருவனவற்றைப் பெற்றுள்ளோம்:

- ஒப்பந்தத்தின் கீழ் *57* முகவராண்மைகள்
- *91* பல்வேறுபட்ட நிகழ்ச்சிகள்
- அந்த நிகழ்ச்சிகளில் *11,740* க்கும் மேற்பட்ட குடியிருப்பாளர் பங்குபற்றுநர்கள்

## *STAC* இற்றைப்படுத்தல்

மூத்த குடியிருப்பாளர் ஆலோசனைக் குழுவில் *(STAC)* சேர்வதற்கு விண்ணப்பித்த அனைவருக்கும் நன்றி. *16* புதிய உறுப்பினர்களை வரவேற்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம்!

இந்தக் குழு இந்த வசந்த காலத்திற்கான ஏற்பாடுகளை மும்முராகச் செய்து வருகின்றது. மே மாதக் கூட்டம், புதிய உறுப்பினர்களை அறிமுகம் செய்து, *STAC* செய்யும் பணிகளை கோடிட்டுக் காட்டி, குழுவின் வேலைத் திட்டத்தை மீளாய்வு செய்வதில் கவனம் செலுத்தியது.

ஜூன் மாதக் கூட்டத்தில், *STAC* குழு *Community Connect+* மற்றும் இடப் பயன்பாட்டுக் கொள்கை மற்றும் டொராண்டோ சீனியர் ஹவுசிங் பங்குடமைகள் குறித்த இற்றைப்படுத்தல்களில் கவனம் செலுத்தியது. குடியிருப்பாளர்களுக்கும் அதிகமான நிகழ்ச்சிகளை வழங்குவதற்காக டொரண்டோ நகர சபையுடன் எமது ஒத்துழைப்பைப் பற்றி ஊழியர்கள் இற்றைப்படுத்திய தகவல்களை வழங்கினர். இந்த மேம்பட்ட ஒத்துழைப்பு, *2025* ஏப்ரல் *8* ஆம் திகதி நகரத்தின் பொருளாதார மற்றும் சமுதாய அபிவிருத்திக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு அறிக்கையின் விளைவாக ஏற்பட்டதாகும் *(**EC19.2**)*.

## ஞாபகார்த்தமாக

வடகிழக்கு பிராந்தியத்தில் பீபீ மைமூன் நேஷா அலி, மார்கரேட்டா கார் என்ற இரண்டு சுறுசுறுப்பான குடியிருப்பாளர் தன்னார்வலர்களான சமுதாய உறுப்பினர்களை நாங்கள் சமீபத்தில் இழந்தோம். தமது சமுதாயங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் பிணைப்பையும் கொண்டு வந்த அவர்களின் அர்ப்பணிப்புக்காகவும் ஆர்வத்துக்காகவும் அவர்கள் அன்புடன் நினைவுகூரப்படுவார்கள்.

## மூத்த குடியிருப்பாளர் ஆலோசனைக் குழுவை அறிந்து கொள்வோம்

மூத்த குடியிருப்பாளர் ஆலோசனைக் குழு *(STAC)* சமீபத்தில் *16* புதிய உறுப்பினர்களை

சேர்த்துக்கொண்டது. கீழே உள்ள புதிய உறுப்பினர்களையும், தொடர்ந்து இணைந்திருக்கும் பழைய உறுப்பினர்களையும் அறிந்துகொள்வோம். இந்த ஆவணத்தின் இறுதியில் அனைத்து *STAC* உறுப்பினர்களிதும் புகைப்படங்களை நீங்கள் காணலாம்.

## வடகிழக்கு

கிறிஸ்டினா லூட்டா, கியாரா ஃபைன், நைமா சித்திகி, கொலின் டுஹார்ட், ஜவாத் ஹெலாலி, மரிட்டா அபுண்டா

## வடமேற்கு

பில் லோஹ்மன், ஆர்னோல்ட் மார்குலிஸ், இங்க்ரிட் கொலின்ஸ், லிஸ் டர்னர், செயிட் சஃபாவி, ஷீலா ஃபார்

## தென்கிழக்கு

லின் ஸீ, லிஸ் ரியான், டெர்ரி கோல்சன், ஜிம் மீக்ஸ், ஜெர்ரி லம்பேர்டே, ஜெஸ்ஸி கோஹூன்

## தென்மேற்கு

ரொபர்ட்டா பட்லர், சூரன் செல்லதுரை, அலன் டடின், நோரா ஜார்டின், டெபி ஓ பிரையன், ஜேன் யாங்

## குடியிருப்பாளர் கவிதை

***Who Said It's Golden (***அது தங்கம் என்று சொன்னவர் யார் – டைரா மீட், குடியிருப்பாளர்

நான் மருத்துவ காத்திருப்பு அறைக்குள் நடந்தேன்
எனக்குப் பொறுப்பாக இருந்த மூத்த அதிகாரியுடன்
இன்னொரு மூத்தவர் ஏற்கனவே
காத்துக்கொண்டிருந்தார்
என்னைப் பார்த்து, திடீரெனக் கூறினார்
"வயதாகிவிடாதே!"
அது தவிர்க்க முடியாதது என்று நான் சொன்னேன்
அது எப்போதும் என் ஞாபகத்தில் வருகின்றது,
என் தோல்களில் தட்டுகின்றது
என் குதிகால்களைக் கடிக்கின்றது
அவள் தொடர்ந்து முணுமுணுத்தாறு முறைப்பாடு
செய்தாள்
" இது பொன்னான காலம் என்று யார் சொன்னார்கள் "
அல்லது ரோஸி என்று
அது பெரும்பாலும் இரும்பைப் போன்றே உள்ளது



விறைப்பாகவும் வலியாகவும்
இருக்கின்றது
துருப்பிடித்து, நொறுங்கிக்
கொண்டிருக்கின்றது
மற்றும் உடைந்து விழுகின்றது
ஹா, அவர்கள் சொன்னார்கள்
வயதாகும் போது ஞானம்
பிறக்கும் என்று
நான் சிலவற்றைப் பெற்றேன்
என்பது எனக்குத் தெரியும்
ஆனால் எனக்குத் தேவைப்படும்போது
அது மாறி மறைகின்றது
அவள் எழுந்து, தன் கைத் தடியில் சாய்ந்தாள்
பின்னர் தட்டினாள்
இன்னும் முணுமுணுத்துக்கொண்டும் முறைப்பாடு
செய்து கொண்டும் இருக்கிறாள்
அந்த சந்திப்பைப் பற்றி நான் பலமுறை நினைத்துப்
பார்த்தேன்
எனது முதுமைக்கு நான் எவ்வாறு தயாராக வேண்டும்?
அது உடலைத் தளர்ச்சியடையச் செய்கின்றது
இனிமையான விடயங்களால் என் மனதைப்
புதுப்பிப்பேன்.
நான் நல்ல எண்ணங்களைத் தியானிப்பேன்.
நானே எனக்கு உயிர்கொடுப்பவனாக இருப்பேன்
குறைவாகவே முறைப்பாடு செய்யுங்கள்
அதிகம் அதிகம் நன்றி கூறுங்கள்

## செயலில் இறங்கிய சமுதாயம்

டொரண்டோ சீனியர்ஸ் ஹவுசிங் திட்டம் முழுவதும், குடியிருப்பாளர் தன்னார்வலர்கள் ஒரு நேரத்தில் ஒரு நிகழ்வு என்ற அடிப்படையில் செழிப்பான சமுதாயங்களை உருவாக்கி வருகின்றனர். இந்த நிகழ்வுகளில் சிலவற்றின் சிறப்பம்சங்களையும் புகைப்படங்களையும் அடுத்த சில பக்கங்களில் காணலாம்.

**வெஸ்ட் லொட்ஜ்:** இந்த வசந்த காலத்தில், வெஸ்ட் லொட்ஜில் உள்ள குடியிருப்பாளர்கள் வெஸ்ட் நெய்பர்ஹுட் ஹவுஸ் மற்றும் மேக்கிங் ஆர்ட் மேக்கிங் சேஞ்ச் *(MAMC)* ஆகியவற்றின் ஆதரவுடன் ஒரு மகிழ்ச்சியான சமுதாய கலைச் செயற்திட்டத்தில் பங்கேற்றனர். உருவாக்கப்பட்ட இந்தப் படைப்பு வெறும் கலையை விட அதிகமானதாகும்; இது குடியிருப்பாளர்களிடமிருந்து அவர்களின் அன்பான பார்க்டேல் சுற்றுப்புறத்திற்கு எழுதப்பட்ட ஒரு இதயப்பூர்வமான "காதல் கடிதம்" ஆகும். இந்த ஊக்கமளிக்கும் கலைச் செயற்திட்டத்தை சிறப்பித்துக் காட்டும் **வெஸ்ட் லொட்ஜ் இணையப் பக்கத்தை** பாருங்கள்.



மே மாதத்தில் *9* **ஹால்டன் அவெனியூ** ஒரு நேர்த்தியான பிற்பகல் தேநீர் விருந்தை நடத்தியது, *40* குடியிருப்பாளர்கள அலங்காரம் செய்து விருந்துகளை அனுபவித்தனர்.

*717* **பிராட்வியூ** தொடர்ந்து திரைப்பட இரவுகளை நடத்துகின்றது, *2025* ஆம் ஆண்டில் *12* திரைப்பட இரவுகள் திட்டமிடப்பட்டுள்ளன. இதற்கும் மே மாதம் தொடங்கிய அவர்களின் இருவார கோப்பி கிளப்புக்கும் பணம் செலுத்த உதவும் வகையில் ஒரு பாட்டில் டிரைவ் திட்டமிடப்பட்டுள்ளது.

*17* **பிரிம்லி** வாராந்த கைப்பணி அமர்வுகளை நடத்துகின்றது, அதில் குடியிருப்பாளர்கள் தங்கள் கனடா தின *BBQ* க்காக மீள்சுழற்சி செய்யப்பட்ட தண்ணீர் பாட்டில்கள் மூலம் கனடாவின் கொடியை உருவாக்கினர்.

**கோடைக் கொண்டாட்டங்கள் இதோ***!*

குடியிருப்பாளர்கள் *600* ரோஜர்ஸ் வீதியில் சுமார் *70* குடியிருப்பாளர்கள் கலந்துகொள்ளும்*; 4455* பாதேர்ஸ்ட்

தெருவில் *170*க்கும் மேற்பட்டோர் கலந்து கொள்ளும்; *71* மேர்டனில *65* பேர் கலந்து கொள்ளும் நிகழ்வுகள் உட்பட *40*க்கும் மேற்பட்ட கோடை கால *BBQ*கள் மற்றும் கனடா தின நிகழ்வுகளைத் திட்டமிடுவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

## உங்கள் சமுதாயம் ஒரே பார்வையில்

இந்த ஆவணத்தின் இறுதியில் சமீபத்திய சமுதாய நிகழ்வுகளின் மேலும் பல புகைப்படங்களைக் காணலாம்.








## பகிரப்பட்ட கதைகள் மூலமான காதல்

தியாகராஜா சிவசுந்தரத்தின் வாழ்க்கையின் அடித்தளமாக பகிரப்பட்ட கதைகள் உள்ளன. சிவா என்று நன்கு அறியப்பட்ட அவரது வாழ்க்கையும் காதலும் ஆரம்பத்திலிருந்தே அவரது மனைவி உமாவுடன் தொடர்புபட்டிருந்தது. வாசிப்பில் மிகுந்த ஆர்வம் கொண்ட அவள், தான் வாசித்த கதைகளின் சுருக்கங்களைக் கூறி அவனை மகிழ்விப்பாள், மேலும் ஜியோபார்டி *(Jeopardy)* போன்ற விளையாட்டு நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது தன் அறிவால் அவனை வியப்பில் ஆழ்த்துவாள்.

ஒன்றாக, அவர்கள் பாரிஸ், சுவிட்சர்லாந்து, சிங்கப்பூர் போன்ற இடங்களுக்குப் பயணம் செய்து உலகை ஆராய்ந்தனர். இப்போது, அவள் இறந்து இரண்டு வருடங்களுக்குப் பின்னரும் கூட, தனக்கு ஊக்கம் தேவைப்படும் போதெல்லாம் தங்கள் பயணப் புகைப்பட அல்பங்களைப் புரட்டிப் பார்த்து, அவற்றை


வெளியே எடுத்துப் பார்ப்பதன் மூலம் அவர் ஆறுதல் அடைகின்றார்.

உமாவும் சிவாவும் சாய் பாபாவின் "எப்போதும் உதவுங்கள், ஒருபோதும் காயப்படுத்தாதீர்கள்" என்ற காலத்தால் அழியாத கூற்றின் வழிகாட்டலில் தங்கள் வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர். 1989 ஆம் ஆண்டு, அவர்கள் இலங்கையிலிருந்து கனடாவுக்குக் குடிபெயர்ந்தபோது, உமா மெயின்ஸ்டே ஹவுசிங்கில் வேலை செய்யத் தொடங்கினாள். அங்கு அவள் மனநலக் குறைபாடு மற்றும் போதைப் பழக்கத்தால் போராடுபவர்களை ஆதரிப்பதற்காக தன்னை அர்ப்பணித்து வேலை செய்தாள்.

2016 ஆம் ஆண்டு அவர்கள் நீல்சன் ஹால் அப்பார்ட்மெண்டுக்கு குடிபெயர்ந்தபோது, உமா தனது சொந்த ஹார்லெக்வின் *(Harlequin)* காதல் புத்தகங்களையும் நன்கொடையாக வழங்கி அந்தச் சிறிய கட்டிட நூலகத்தை நிரம்பி வழியும் தொகுப்பாக மாற்றினார். சிவா சமூகக் கழகத்தின் தலைவரானார், அங்கு அவர் தனது சிறந்த நண்பரான ராமலிங்கம் (ராம்) கனபதிப்பிள்ளையைச் சந்தித்தார். குறிப்பாக கோவிட் காலத்தில் சமுதாயத்தை ஆதரிப்பது பற்றிய ராம் மற்றும் சிவாவின் பகிரப்பட்ட கதை. உணவு மற்றும் பிற தேவைகளை உறுதி செய்து, அரசியல்வாதிகள் மற்றும் சமூக அமைப்புகளுடன் குடியிருப்பாளர்களுக்காக ராம் வாதிட்டதுடன் அவர் தமிழ் பேசும் குடியிருப்பாளர்களுக்கு உரை

மொழிபெயர்ப்புச் சேவைகளை வழங்கினார் துரதிர்ஷ்டவசமாக, ராம் 2024 இல் காலமானார்.

தனது மனைவியின் மறைவுக்குப் பின்னர், சிவா அந்த நூலகத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, பகிரப்பட்ட கதைகளின் பாரம்பரியத்தைத் தொடர்ந்தார். நூலகத்தில் கிடைத்த 1931 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட இலங்கை சமையல் புத்தகத்திலிருந்து அவர் சமைக்கவும் கற்றுக்கொண்டார். உமா எப்போதும் தன்னுடன் இருப்பதாகவும், தன்னை வழிநடத்துவதாகவும், தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் அவர் உணர்கின்றார்.



சமீபத்தில், சமூகத் திட்டமிடலில் இருந்து பின்வாங்கிய சிவா, இப்போது நூலகத்திற்கு புதிய தன்னார்வலர்களைத் தேடிக்கொண்டிருக்கின்றார். சமீபத்தில் ஒரு குடியிருப்பாளர் உதவ முன்வந்தபோது

அவர் மகிழ்ச்சியடைந்துடன் இன்னும் பலர் அவ்வாறு முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கின்றார். மன அழுத்தத்தையும் மனச்சோர்வையும் குறைப்பதற்கு உதவ, சிவா காகிதத்தில் அச்சிட்ட புத்தகங்களைப் படிப்பதை ஊக்குவிக்கின்றார். அவர் ஒருபோதும் புத்தகங்களை நிராகரிக்க மாட்டார். டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங்கில் உள்ள மற்ற கட்டிடங்களுக்கு தனது மேலதிகப் புத்தகங்களில் சிலவற்றை நன்கொடையாக வழங்க விரும்புகின்றார். தங்களது கதைகள் தொடர்ந்து பகிரப்படுவதை உறுதிசெய்கின்றார்.

சேவை மூலம் உங்கள் கதையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது, நீங்கள் ஒருபோதும் உடைக்க விரும்பாத ஒரு தொடர்பை உருவாக்குவதால், இளம் வயதிலேயே தன்னார்வப் பணியைத் தொடங்குமாறு சிவா பரிந்துரைக்கின்றார்.

உங்கள் கட்டிடத்திற்கு சிவாவின் நூலகத்திலிருந்து புத்தகங்களைப் பெற விரும்பினால், தயவுசெய்து உங்கள் சமுதாய சேவைகள் ஒருங்கிணைப்பாளரைத் தொடர்பு கொள்ளவும்.

## *R-PATH* இற்றைப்படுத்தல்

டொராண்டோ ஹவுசிங்கில் பொறுப்புணர்வுள்ள தனிப்பட்ட அணுகல் *(R-PATH)* குழு என்பது குடியிருப்பாளர் தலைமையிலான குழுவாகும். அது

இந்தக் கோடை காலத்தில் 12 ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடுகின்றது. உடல் ஊனமுற்றோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதும், டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங் கார்ப்பரேஷன் (TSHC) மற்றும் டொராண்டோ கம்யூனிட்டி ஹவுசிங் கார்ப்பரேஷன் (TCHC) ஆகியவற்றை அணுகக்கூடிய வீட்டுவசதிகளை வழங்குவதில் முன்னோடிகளாக்குவதும் இந்தக் குழுவின் குறிக்கோளாகும். சீனியர்ஸ் ஸ்பீக்கின் ஒவ்வொரு இரண்டாவது இதழிலும் குடியிருப்பாளர்களுக்கான ஆக்கங்களை R-PATH வழங்குகின்றது.

## R-PATH அறிக்கைகள்: பிரதமர் மார்க் கார்னிக்கு ஒரு கடிதம்

2025 மே மாதத்தில் பிரதமர் மார்க் கார்னி தனது புதிய அமைச்சரவை அமைச்சர்களை அறிவித்தபோது, அதில் ஊனமுற்றோருக்கான ஒரு அமைச்சர் இடம்பெறவில்லை. 10 ஆண்டுகளில் முதல் முறையாக, எட்டு மில்லியன் ஊனமுற்ற கனேடியர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளைக் கையாளும் ஒரு சமஷ்டி அமைச்சர் கனடாவில் இல்லை.

R-PATH குழு அணுகல் தன்மையை கடுமையாக ஆதரிக்கின்ற ஒரு குழுவாகும். இந்தத் தீர்மானம் குறித்து நாங்கள் ஏமாற்றமடைந்துள்ளதை விளக்கி பிரதமருக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளோம். அரசாங்கத்தின் இந்தத் துறைக்குப் பொறுப்பான

அமைச்சர் யாரும் இல்லாதபோது, ஊனமுற்ற கனேடியர்களின் தேவைகள் மறக்கடிக்கப்படும்.

இந்தக் கடிதத்தில், அணுகக்கூடிய வீட்டுவசதி நெருக்கடி குறித்தும் *R-PATH* கூறியது. கனடாவில் டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங் கோப்பரேஷன் போன்ற பெரிய சமூக வீட்டுவசதித் திட்டங்கள் உள்ளன, ஆனால் அவற்றால் அனைவரையும் உள்ளடக்கிய வீட்டுவசதிக்கான தேவையை பூர்த்தி செய்ய முடியாதுள்ளது. தனியார் கம்பெனிகளால் நிர்மாணிக்கப்படும் பெரும்பாலான வீடுகளும் அடுக்குமாடிகளும் அணுகக் கூடியவையாக இல்லை.

கனேடியர்கள் வீடுகளைப் பெறுவதை எளிதாகவும் கட்டுப்படியான விலைகொண்டதாகவும் மாற்றுவதற்காக திரு. கார்னியின் அரசாங்கம் ஒரு வீட்டுவசதித் திட்டத்தை உருவாக்கியுள்ளது. துரதிர்ஷ்டவசமாக, அந்தத் திட்டத்தில் அணுகல் வசதி பற்றிக் குறிப்பிடப்படவில்லை. அணுகக்கூடிய வீட்டுவசதிகளைச் சேர்ப்பது அத்தியவசியமானது என *R-PATH* திரு. கார்னியிடம் கூறியுள்ளது.

ஊனமுற்றோருக்கான ஒரு அமைச்சரை நியமிக்குமாறு திரு. கார்னியிடம் கேட்டோம். இது ஊனமுற்ற கனேடியர்களின் குரல்களை, பிரச்சினைகளை, தேவைகளை சமஷ்டியின் கொள்கைகளிலும் நிகழ்ச்சிகளிலும் உள்ளடக்கும்.

*R-PATH, உங்கள் யூனிட்டை மாற்றியமைப்பதுடன் தொடர்புடைய செயன்முறை பற்றிய "அணுகல்தன்மை*




*உங்களுக்கானது (Accessibility Is for You)" எனும் சிறு புத்தகத்தை எழுதியுள்ளது.* உங்கள் மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளரிடமிருந்து அல்லது [*TSHC இணையதளத்தின்*] ஊடாக இணையவழியில் ஒரு பிரதியை நீங்கள் பெறலாம்.

## தி கார்டன் கேர்ள்ஸ்

நோர்த் யோர்க்கில் உள்ள ஷெப்பர்ட் பிளேஸில், தங்கள் கட்டிடத்தின் தரைகளை அமைதியாக ஒரு தோட்ட சொர்க்கமாக மாற்றி வரும் அற்புதமான பெண்கள்

குழுவொன்று உள்ளது. அவர்கள் தங்களை கார்டெனிங் கிளப் என்று அழைக்கின்றார்கள். ஒவ்வொரு வசந்த காலத்திலும் கோடை காலத்திலும், அவர்கள் வெளியே தண்ணீர் ஊற்றுவதையும், களை பிடுங்குவதையும், அவற்றின் பூக்கள் வளர்வதைப் பார்ப்பதையும் நீங்கள் காணலாம்.

அனைத்து பெண்களும் அந்தக் கட்டிடத்தில் வசிக்கின்றார்கள். தங்களின் ரஷ்யப் பின்னணி மூலம் வலுவான பிணைப்பைப் பகிர்ந்து கொள்கின்றார்கள். இந்தக் குழுவில் **வல்யா நெம்கோவா**, **கலினா ஸிபைகினா**, **ஜோர்ஜெட்டா கலேஷன்**, **நோனா பிபிக்**, **வேரா செர்லிவ்ரெவிச்**, **நட்டாலியா பரொனோவா** மற்றும் அவர்களது மூத்த தோட்டக்காரர், *95* வயதான **விக்டோரியா ஜூனுர்ஸ்** ஆகியோர் அடங்குவர். அவர்கள் மத்தியில் கவர்ச்சியான வாழ்க்கைக் கதைகள் உள்ளன: கலினா ரஷ்யாவைச் சேர்ந்த முன்னாள் பொறியியலாளர் ஆவார். ஜோர்ஜெட்டா ஆர்மேனியாவைச் சேர்ந்த ஓய்வு பெற்ற சிகையலங்கார நிபுணர் ஆவார். வேரா பெலாரஸைச் சேர்ந்த முன்னாள் அழகுக்கலை நிபுணர் ஆவார்.



கலினா, **வல்யா கிரிஸ்சுகுடன்** (இப்போது காலஞ் சென்றுவிட்டார்) இணைந்து, 2005 இல் இந்தக் குழுவைத் தொடங்கினார். முன்னாள் குடியிருப்பாளர் பிரதிநிதியான ஜோர்ஜெட்டா, இந்தக் குழுவில் சேருவதற்கு முன்பு பொருட்களை வழங்குவதன் மூலம் தொடங்கினார். மிகவும் இளையவரான நட்டாலியா இப்போது செடிகளைப் பராமரிக்க உதவுகின்றார்.

"நாங்கள் கட்டிடத்தின் முன்பக்கத்தை சுத்தம் செய்வதன் மூலம் தொடங்கினோம்", "பின்னர் பாதர்ஸ்ட் தெருவில் பூக்கள் மற்றும் புதர்களைச் சேர்த்தோம். நகரத்தின் சிறந்த தோட்ட விருதுகளை இரண்டு முறை வென்றுள்ளோம் என கலினா கூறுகின்றாள். இப்போது, எங்களுக்கு நான்கு பக்கங்களிலும் தோட்டங்கள் உள்ளன!

பல ஆண்டுகளாக, அவர்களுக்கு தாராள மனப்பான்மையுடைய மனிதர்களினது ஆதர கிடைத்ததுடன் நிகழ்ச்சிகளும் அவர்களுக்கு ஆதரவாக இருந்துள்ளன. உள்ளூர் நகர உறுப்பினரான **ஜேம்ஸ் பாஸ்டெர்னக்** ஆரம்ப காலத்தில் கருவிகள், மண் மற்றும் தாவரங்கள் மூலம் உதவியதுடன், இன்றும் உதவி செய்கின்றார். ஒரு உள்ளூர் இலாப நோக்கற்ற குழுவான *LEAF* (**லீஃப்**), ஆலோசனைகள், மரங்கள் மற்றும் புதர்களை நன்கொடையாக வழங்கியுள்ளது. கட்டடத் தொழிற்பாட்டுப் பிரிவின் மூலமான நிதியம் பூக்களை வழங்குகின்றது. சமூகச் செயற்பாட்டு நிதியம் தோட்டக்கலை கருவிகளைக் கொண்டு வருகின்றது.

அவர்களுக்குப் பிடித்த தாவரங்கள்? பியோனிகள், ரோஜாக்கள், லிலக்ஸ், ஹைட்ரேஞ்சாக்கள் மற்றும் கார்டேனியாக்கள். "பூக்கள் பூக்கும்போது மக்கள் சிரிப்பதைப் பார்ப்பது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது" என கலினா கூறுகின்றார். "அதனால் தான் நாங்கள் அதைச் செய்கின்றோம்."

அவர்கள் கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் தோட்டம் செய்கின்றார்கள், மழை நாட்களை இணைய தளங்களில் ஆராய்ச்சியில் செலவிடுகின்றார்கள். விசேட ரோஜா தோட்டத்தில் வேலை செய்வதை இரசிக்கும் **லேடி டோனெல்லி**யைப் போல மற்ற குத்தகைதாரர்களும் உதவுகின்றார்கள். சில குழந்தைகளும் பேரக் குழந்தைகள் கூட அங்கு வரும்

போது உதவுகின்றார்கள். **சோபியா பர்மன்** ஒரு காலத்தால் அழியாத மொழிபெயர்ப்பாளர், **ஆர்னோல்ட் மார்குலிஸ்** விண்ணப்பங்களைத் தயாரித்து குழுவை ஆதரவு வலையமைப்புக்களுடன் இணைக்கின்றார்.

ஒரு தோட்டக்காரரின் வாழ்க்கை அழகானது, ஆனால் எப்போதும் பரிபூரணமாக இருக்காது. "யாராவது தோட்டங்களை சேதப்படுத்தினால் அல்லது பொருட்கள் குறித்து நாங்கள் உடன்படாத போது அது வருத்தமாக இருக்கின்றது" என ஜோர்ஜெட்டா கூறுகின்றார். "ஆனால் நாங்கள் பயணத்தை தொடர்கின்றோம்."

புதிய உறுப்பினர்கள், கருவிகள், மண், தாவரங்கள் மற்றும் ஒருவேளை நீர்ப்பாசன முறை மீதான அவர்களின் எதிர்பார்ப்பு அவர்களை ஊக்குவிக்கின்றது.

ஷெப்பர்ட் பிளேஸின் கார்டன் கேர்ள்ஸ், ஒரு சமுதாயத்தில் அக்கறையும், முயற்சியும் அன்பும் ஒன்று சேரும்போது என்ன வளர முடியும் என்பதற்கான மகிழ்ச்சியூட்டும் நினைவூட்டலாகும்.

## *2024* ஆண்டறிக்கையின் சிறப்பம்சங்கள்

### *Community Connect+:* கட்டிட குடியிருப்பாளர் ஈடுபாடு

*Community Connect+* என அழைக்கப்படும் குடியிருப்பாளர் ஈடுபாட்டிற்கான ஒரு புதிய அணுகுமுறை,

குடியிருப்பாளர்களின் குரல்களை வலுப்படுத்துதல், தனிமைப்படுதலைக் குறைத்தல், பணியாளர்-குடியிருப்பாளர் உறவுகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு *2024* ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

- *2024* டிசம்பரில் உள்ளவாறான குடியிருப்பாளர் தன்னார்வலர்கள் ***172***
- ***58*** குடியிருப்பாளர் வட்டங்கள் நிறுவப்பட்டன
- சமுதாயச் செயற்பாட்டு நிதியத்தின் ஊடாக குடியிருப்பாளர்களால் வழிநடாத்தப்படும் செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதற்கு ***$240,000***
- குடியிருப்பாளர் தலைமையிலான ***206*** செயற்பாடுகள்
- முகவரின் தலைமையிலான மீண்டெழும் நிகழ்ச்சிகள் ***176***
- *2023* ஆம் ஆண்டை விட குடியிருப்பாளர் தலைமையிலான செயற்பாடுளுக்கான செலவின அதிகரிப்பு ***78%***

## குடியிருப்பாளர்களின் குரல்களைச் சிறப்பித்துக் காட்டுதல்

- ***70*** குடியிருப்பாளர் நகர மண்டபங்கள்
- ***1,600*** பங்குபற்றுநர்கள்

- பெரு நிறுவன நிகழ்வுகளுக்கு *150* க்கு மேற்பட்ட உரை மொழிபெயர்ப்பாளர்கள் வழங்கப்பட்டனர.
- *264* குடியிருப்பாளர்கள் *NORC (*இயற்கையாக நிகழும் ஓய்வுபெறும் சமுதாயங்கள்*)* தூதுவர் பயிற்சி திட்டத்தில் பங்கேற்றனர்.

## குடியிருப்பாளர்களை அவர்களது வீடுகளிலேயே வைத்திருத்தல்

- *98.43%* குடியிருப்பு விகிதம்
- குடியிருப்பு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு *107* வீடுகள் உதவி பெற்றன.
- *91%* வீடுகள் நல்ல நிலையில் உள்ளன

## டொராண்டோ முதியோர் வீட்டுக் கட்டிடங்களைப் பராமரித்தல்

*$24.3* **மில்லியன்** மதிப்புள்ள *123* மூலதனச் செயற்திட்டங்களை நிறைவு செய்துள்ளது, அவற்றுள்:

- அணுகல்தன்மை மேம்பாடுகள்
- நீர்ப் பாதுகாப்பு முன்னெடுப்புகள்
- சலவை அறை மேம்பாடுகள்
- மின்சாரம், வெப்பமாக்கல் மற்றும் நீர்க்குழாய் அமைப்புகளுக்கான மேம்பாடுகள்

- யன்னல்கள், கூரைகள், கட்டமைப்பு மற்றும் வாகனத் தரிப்பு கேரேஜ் திருத்த வேலைகள் போன்ற வெளிப்புற மெருகூட்டல் வேலைகள்.




**பாதுகாப்பான சமுதாயங்களை உருவாக்குதல்**

- *759* நலத்திட்ட சோதனைகள் நடத்தப்பட்டன
- அயலவர்களுக்கு இடையிலான *980* மோதல்கள் தீர்க்கப்பட்டன
- இடையூறு விளைவிக்கும் சம்பவங்கள் பற்றிய ***1,026*** அழைப்புகளுக்குப் பதிலளிக்கப்பட்டது

*2024* ஆண்டறிக்கையை நீங்கள் இங்கே வாசிக்கலாம்: ***TorontoSeniorsHousing.ca/2024-annual-report***

## குடியிருப்பாளர்களுக்கான வளங்கள்

## டொராண்டோ மூத்தோர் வீட்டுவசதி வரவேற்பு வழிகாட்டி இப்போது பெற்றுக்கொள்ளலாம்.




எங்கள் இற்றைப்படுத்தப்பட்ட குடியிருப்பாளர் வரவேற்பு வழிகாட்டியை இப்போது டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங் இணைய தளத்தில் வாசிக்க, அச்சிட அல்லது பதிவிறக்கம் செய்ய முடியும். ஒரு குடியிருப்பாளர் என்ற வகையில் உங்கள் உரிமைகள் மற்றும் கடமைகள், உங்கள் வாடகையை எவ்வாறு செலுத்துவது, பழுதுபார்ப்புகளை எவ்வாறு கேட்பது, டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங் ஊழியர்களை எவ்வாறு தொடர்பு கொள்வது மற்றும் இன்னும் பலவற்றை உள்ளடக்கிய பல முக்கியமான தலைப்புகளை இது உள்ளடக்கியுள்ளது.

இந்த வழிகாட்டி *14* மொழிகளில் கிடைக்கின்றது. அச்சிடப்பட்ட பிரதி அல்லது வேறு மொழி அல்லது வடிவம் தேவைப்பட்டால், குடியிருப்பாளர்கள் தங்கள் மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளரை அல்லது குடியிருப்பாளர் ஆதரவு நிலையத்தை தொடர்பு கொள்ளலாம்.

புதிய வழிகாட்டியை ***TorontoSeniorsHousing.ca/tenant-welcome-guide/*** இல் பார்க்கலாம்

## உணவு வளங்கள்

டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங் இணைய தளத்தில் உள்ள எங்கள் சுகாதாரம் மற்றும் சமுதாய இணைப்புகள் பக்கம் இப்போது உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்ளும் குடியிருப்பாளர்களை ஆதரிப்பதற்கான இணைப்புகளை உள்ளடக்கியுள்ளது, இதில் உணவு வங்கிகள் மற்றும் ஃபுட் ஹம்பர் விநியோகம் ஆகியவை அடங்கும். மேலும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு [TorontoSeniorsHousing.ca/health-and-community-connections/](TorontoSeniorsHousing.ca/health-and-community-connections/) ஐப் பாருங்கள்

## டொராண்டோவில் உள்ள மூத்த குடிமக்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான சேவைளுக்கான விபரக்கொத்து

போக்குவரத்து, பொழுதுபோக்கு, வேலைவாய்ப்பு மற்றும் தன்னார்வத் தொண்டு, வீட்டுவசதிப் பிரச்சினைகள், சுகாதாரப் பராமரிப்பு, சட்டக் கேள்விகள் மற்றும் பலவற்றைப் பற்றிய தகவல்களைக் கண்டறிய நீங்கள் பயன்படுத்தக்கூடிய ஒரு சேவைகள் விபரக்கொத்தை டொராண்டோ நகர நிர்வாகம் வழங்குகின்றது. அந்த வழிகாட்டியை [www.toronto.ca/wp-content/uploads/2024/12/93e2-CS-24-0180SeniorsDirectoryFullDraftC7.pdf](www.toronto.ca/wp-content/uploads/2024/12/93e2-CS-24-0180SeniorsDirectoryFullDraftC7.pdf) இல் பார்க்கலாம்

## டொராண்டோ நகர பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் பற்றிய இற்றைப்படுத்தல்கள்

பூங்காக்கள், வனவளர்ப்பு மற்றும் பொழுதுபோக்கு வசதிகளில் உள்ள பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், சேவைகள் மற்றும் எதிர்கால நிகழ்வுகள் பற்றிய இற்றைப்படுத்தல்களையும் தகவல்களையும் பெற்றுக்கொள்ள ஆர்வமாக உள்ளீர்களா? [toronto.ca/e-updates/](toronto.ca/e-updates/) இல் ***Recreation*** இ-செய்திமடலுக்கு பதிவு செய்யுங்கள்

## சீனியர்ஸ் ஸ்பீக் பல மொழிகளில் கிடைக்கின்றது

இந்த ஆவணத்தை மாற்று மொழி அல்லது வடிவத்தில் கோருவதற்கு *416-945-0800* எனும் இலக்கத்தை அழைக்கவும்.

## இணைந்திருங்கள்!

டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங் பற்றிய செய்திகள் மற்றும் நிகழ்வுகளுடன் தொடர்பில் இருக்கவும் இற்றைப்படுத்திய நிலையில் இருக்கவும், சமூக ஊடகங்களில் எங்களைப் பின்தொடரவும். நீங்கள் எங்களை *Facebook* மற்றும் *LinkedIn* இல் காணலாம். எங்கள் [*TorontoSeniorsHousing.ca*](TorontoSeniorsHousing.ca) இணைய தளத்திலும் மேலும் விபரங்களை அறியலாம்.

வரவிருக்கும் செய்திமடலில் இடம்பெற விரும்புகின்றீர்களா? உங்கள் மின்னஞ்சலுக்கு சீனியர்ஸ் ஸ்பீக்கைப் பெற விரும்புகின்றீர்களா? எங்களை SeniorsSpeak@TorontoSeniorsHousing.ca இல் தொடர்புகொள்ளுங்கள்.

## தொடர்பில் இருங்கள்

நீங்கள் இந்த இலக்கங்களுக்கு வாரத்தில் ஏழு நாட்களிலும் 24 மணிநேரமும் அழைக்கலாம் அல்லது Support@TorontoSeniorsHousing.ca க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

**குடியிருப்பாளர் ஆதரவு நிலையம்**: 416-945-0800

**சமுதாய பாதுகாப்புப் பிரிவு**: 416-921-2323

**குற்றத் தடுப்பாளர்கள்**: 416-222-8477

## நன்றிகள்

டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங் எங்கள் நகரத்தின் பல்லினத் தன்மையையும் நாங்கள் ஆதரிக்கும் குடியிருப்பாளர்களையும் மதிக்கின்றது. டொராண்டோவில் இந்த வளமான பல்லினத் தன்மை கொண்ட மக்கள் ஒன்றாக வாழ வழிவகுத்த வரலாற்றை, நேர்மறையானவை, எதிர்மறையானவை ஆகிய இரண்டையும் நாங்கள் ஒப்புக்கொள்கின்றோம்.

டொராண்டோ மூத்தோர் வீட்டுவசதி நிலம் மற்றும் ஆபிரிக்க மூதாதையர் ஒப்புதலுக்கு TorontoSeniorsHousing.ca/Acknowledgements ஐப் பார்வையிடவும்.

# சிரேஷ்ட குடியிருப்பாளர் ஆலோசனைக் குழுவின் புகைப்படங்கள்

# Meet the **Senior Tenants Advisory Committee**

The Senior Tenants Advisory Committee recently welcomed 16 new members. Please meet the new members as well as the continuing alumni members below.

## **North** East ·················· **North** West



**Christina Luta**
North East



**Kiara Fine**
North East



**Naima Siddiqui**
North East



**Colleen Duhart**
North East



**Javad Helalee**
North East



**Marrita Abunda**
North East



**Bill Lohman**
North West



**Arnold Margulis**
North West



**Ingrid Collins**
North West



**Liz Turner**
North West



**Seyed Safavi**
North West



**Sheila Farr**
North West




## உங்கள் சமுதாயம் ஒரே பார்வையில்: புகைப்படங்கள்


Your community
at a glance!
12


CANADA